

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு விழா வருகின்ற ஜூலை ஏழாம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக திருச்செந்தூர் நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து அமைச்சர் கே.என்.நேரு , கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் நேற்று (17/06/2025) திருச்செந்தூரில் ஆய்வு நடத்தினர். சபாநாயகர் அப்பாவு, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பேருந்து நிலையத்தில் புதிய விரிவான மினி பேருந்துத் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (16.06.2025) கிராமங்கள் குக்கிராமங்கள் பயன் அடையும் வகையில், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் ஏற்பாட்டில் மாவட்ட கழக அலுவலகத்தில் ”ஓரணியில் தமிழ்நாடுஎன்ற தலைப்பில் தமிழக மக்களை கழகத்தோடு ஒன்றிணைக்க கழக உறுப்பினர் சேர்க்கை தீவிரப்படுத்தும் அடிப்படை நோக்கில் உறுப்பினர் படிவம் வழங்கும் நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று கழக நிர்வாகிகளிடம் வழங்கினார். நிகழ்வில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் அப்துல்வகாப் எம்.எல். ஏ.நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,கழக நிர்வாகிகள் முருகன், மாலைராஜா, பேச்சிபாண்டியன், லட்சுமணன், தர்மன், சுரேஷ், சுப்பிரமணியன், தினேஷ், நமச்சிவாயம், விஜிலா சத்யானந்த், கிரிஜா குமார், நமச்சிவாயம் சுப்பிரமணியன், அண்டன் செல்லத்துரை, அனிதா, ஜூலியட் , உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கிராமங்கள், குக்கிராமங்கள் பயனடையும் வகையில்

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புதிய விரிவான மினி பேருந்து திட்டம்!

### அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

கள்ளக்குறிச்சி, ஜூன் 18 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தஞ்சாவூரில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழக முழுவதும் பஸ் வசதி இல்லாத மக்கள் பயன்பெறும் வகையில் 3,103 வழித்தடங்களில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பேருந்து நிலையத்தில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று முன்தினம் (16.06.2025) திங்கள் கிழமை அன்று கிராமங்கள், குக்கிராமங்கள் பயனடையும் வகையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளும் முதன்மை துறைகளாக சிறந்து விளங்கிட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கான பல்வேறு சிறப்பு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார், அதன்படி போக்குவரத்து துறையில் கூடுதல் பேருந்துகள், கிராமப்புற பகுதிகளில் புதிய வழித் தடங்களுக்கான பேருந்து சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி பொதுமக்களின் நலனை பாதுகாத்து வருகிறார், அதன்படி தமிழ்நாடு அரசு புதிய விரிவான மினி பேருந்து திட்டம் 2024ன் படி பொதுமக்கள் நலன் கருதி பேருந்து வசதியில்லாத கிராமங்கள், குக்கிராமங்கள், நகரங்களுடன் இணைத்து ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து சேவை வழங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ளது, அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தஞ்சாவூரில் புதிய விரிவான மினி பேருந்து திட்டம் நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பேருந்து நிலையத்தில் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தின் நீளம் 25கி.மீ ஆகும். பழைய மினி பேருந்து வழித்தடத்தின் நீளம் 20கி.மீ ல் இருந்து 25 கி.மீ ஆக தடம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மினி பேருந்து சேவை மொத்த வழித்தடத்தில் இருந்து 65% பேருந்து செல்லாத வழித்தடமாகவும் 35% பேருந்து செல்லும் வழித்தடத்திற்கு அனுமதிச்சீட்டு வழங்கப்பட வேண்டும். மினி பேருந்து குறைந்த பட்ச கட்டணம் ரூ.4.00 அதிகபட்சமாக ரூ.11 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 70 மினி பேருந்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. புதிய விரிவான மினி பேருந்து திட்டம் 2024ன் படி இம்மாவட்டத்தில் புதிய வழித் தடத்திற்கான விண்ணப்பம் பெறப்பட்டு புதிய அனுமதி சீட்டு வழங்க செயல்முறை ஆணை 59 வாகனங்களுக்கும் ஏற்கனவே இயக்கப்படும் மினி பேருந்துகளுக்கு வழித்தடம் நீட்டிப்பு செய்து 55 வாகனங்களுக்கும் செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மினி பேருந்து திட்டம் துவக்க நாளான நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இயக்க 8 வாகனங்களுக்கு புதிய வழித்தடத்தில் புதிய அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இயக்கப்பட்ட மினி பேருந்து வழித்தடம் நீட்டிப்பு செய்த 27 மினி பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் மினி பேருந்துக்கான அனுமதிச் சீட்டு பெற செயல்முறை ஆணை பெற்ற விண்ணப்பதாரருக்கு தொடர்ந்து அனுமதிச்சீட்டு வழங்கப்படும்.

எனவே புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தினை பயணிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தியாகதுருகம் ஒன்றியக் குழுத் தலைவர் ந.தாமோதரன், தியாகதுருகம் ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் இரா.நெடுஞ்செழியன், அட்மா திட்டக்குழு தலைவர் ஒன்றிய கழக செயலாளர் அண்ணாதுரை, பேரூராட்சி மன்ற தலைவர் வீராசாமி, துணைத் தலைவர் சங்கர், வட்டார போக்குவரத்து அலுவலர் நெடுஞ்செழியப்பாண்டியன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், தொடர்புடையத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர், கிளை கழக கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## க.திருநாவுக்கரசு தலைமை! நக்கீரன் கோபால் வரவேற்புரை! மூத்த பத்திரிகையாளர்

# சின்னகுத்தூசி 91 வது பிறந்த நாள் - வாழ்நாள் சாதனையாளர் விருது விழா!

### மூத்த தலைவர் பழ.நெடுமாறன் - விருதுகளை வழங்கி சிறப்புரை!

சென்னை, ஜூன் 18 -

மூத்த பத்திரிகையாளர் சின்னகுத்தூசி 91ஆவது பிறந்தநாள் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது விழா 21.06.2025 சனிக்கிழமையன்று மாலை 6:00 மணியளவில் கவிக்கோ அரங்கம், எண்: 6, 2வது மெயின்ரோடு, சி.ஐ.டி. காலனி (மியூசிக் அகாடமி அருகில்) மயிலாப்பூர், சென்னை600 004. எனும் முகவரியில் நடைபெறுகிறது.



விழாவில், நக்கீரன் ஆசிரியர் நக்கீரன் கோபால் வரவேற்புரையாற்றுகிறார்.

சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை தலைவர் திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு தலைமை வகிக்கிறார்.

சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை செயலாளர் கௌரா ராஜசேகர் முன்னிலை வகிக்கிறார்.

இவ்விழாவில் விருதுகள் வழங்கி மூத்த தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் எழுத்தாளர் கதை சொல்லி பவா செல்லத்துரை வாழ்த்துரை வழங்குகிறார்.

வாழ்நாள் சாதனையாளர் விருதை திராவிட இயக்க சிந்தனையாளர் கருத்தாளர் திருச்சி செல்வேந்திரன் பெறுகிறார்.

சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை அறங்காவலர் இராயப்பன் நன்றியுரையாற்றுகிறார்.

இவ்விழாவில் சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை அறங்காவலர் அருள்செல்வன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

# விருகம்பாக்கத்தில் கலையரங்கம் -கலைஞர் நூற்றாண்டு கட்டடம் திறப்பு!

சென்னை, ஜூன் 18 -

விருகம்பாக்கம் 128வது வார்டில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பிரபாகரராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்ட கலையரங்கம், கலைஞர் நூற்றாண்டு கட்டடம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவற்றை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் மு.ராசா, கே. கண்ணன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விருகம்பாக்கம் 128வது வார்டில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலையரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரராஜா தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.112 இலட்சம் மதிப்பீட்டில் ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் நூற்றாண்டு கட்டிடம். மேயர் திருமதி மேயர் பிரியா அறிவிப்பின்படி மகளிர் உடற்பயிற்சி கூடம் ரூ.38.30 இலட்சத்தில் உள்ளிட்ட புதிய கட்டிடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரராஜா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் பகுதி கழக செயலாளர்கள் மு. ராசா, கே. கண்ணன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன், மாவட்ட துணை செயலாளர் அக்கா வாசுகி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.கே. தங்கராஜ், பகுதி துணை செயலாளர் நாகராஜ், வட்ட கழக செயலாளர்கள் வி.ஏ. ராஜா, மைக்கேல், பகுதி பொருளாளர் ரஞ்சித்குமார், வட்ட நிர்வாகிகள் தியாகராஜன், நசீர் பாய், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சசிக்குமார், மாவட்ட மகளிர் அணி தொண்டர் அணி துணை அமைப்பாளர் விஜயகுமார், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பூங்குழலி, இந்திராணி, உள்ளிட்ட கழக நிர்வாகி கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் முன்னிலையில், பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் தலைமையில் பால் உற்பத்தியாளர்களுக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நேற்று (17.06.2025) சேலம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் பொது மேலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் ப.குமரேஸ்வரன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜ்குமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி ம.வாணி ஈஸ்வரி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி உட்பட தொடர்புடைய அலுவலர்கள், பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர்.

## 12–ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு!

# வாஷிங்டனில் அக் 3- அன்று நடைபெறுகிறது!

### பொருளாதார மேதைகள் பங்கேற்பு! வி.ஆர்.எஸ்.சம்பத் தகவல்!

சென்னை, ஜூன் 18 -

12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு, வாஷிங்டன், டி.சி - அமெரிக்காவில் அக்டோபர் 3 ,4 ,5 2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம், மற்றும் சென்னை வளர்ச்சிக்கழகம், சென்னை இணைந்து 12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு, வாஷிங்டன், டி.சி - அமெரிக்காவில் அக்டோபர் 3 ,4 ,5 2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில், உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில் முனைவோர், நிபுணர்கள் மற்றும் அறிஞர்கள் ஒன்றிணைத்து, உலக அளவில் தமிழர் பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பங்களிப்பை வலியுறுத்தும் முக்கியமான பன்னாட்டு நிகழ்வாகும். உலகமெங்கும் இருந்து தலைசிறந்த வல்லுநர்கள், பொருளாதார மேதைகள், தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் ஒன்றிய அரசின் உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.



உலகத் தமிழர் பொருளாதார மாநாடு வாஷிங்டனில் அக்.3 அன்று நடைபெறுவதையொட்டி இதற்கான இணையதளத்தை அமைச்சர் சா.மு.நாசர், வி.ஐ.டி.பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன் தலைமையில் தொடங்கி வைத்தார். உடன் ஜெயந்தி தங்கபாலு, வி.ஆர்.எஸ்.சம்பத் மற்றும் பலர் உள்ளனர்.

இந்த மாநாட்டின் இணையதளத் தொடக்கமும் மாநாட்டு விளக்க அறிக்கை வெளியீடும் அறிமுக விழா 16 ஜூன் 2025 ஹோட்டல் லீ ராயல் மெரிடியன், சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுபான்மை நலத் துறை மற்றும் அயலகத்தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் கலந்து கொண்டார். விஐடி பல்கலைக்கழகம், வேலூர் வேந்தர், டாக்டர் ஜி. விசு வநாதன், தலைமையேற்றுச் சிறப்புரையாற்றினார்.

சிறப்புவிருந்தினர்களாக டாக்டர் பழனி ஜி. பெரியசாமி -( தலைவர், பிஜிபி குழுமம்) , எம்.எம். அப்துல்லா - எம்.பி., கி. வீரமணி - (தலைவர், ஜெம் குழுமம்) டாக்டர் பீட்டர் (தலைவர், மாதா மருத்துவக் கல்லூரி.) வி. மகாலிங்கம், ஐ.எப்.எஸ் (ஓய்வு) - (முன்னாள் இந்தியத் தூதுவர் கயானா) வீரா வேணுகோபால் (முன்னாள் தலைவர், தமிழ்நாடு அறக்கட்டளை, USA) டாக்டர் டி. சரவணன் - (தலைவர், சேலம் சட்டக் கல்லூரி) ஏ.அபுபக்கர் (தலைவர், பிரசிடெண்ட் குரூப்) , சென்னை. திருமதி. ஜெயந்தி தங்கபாலு (தலைவர், மெகா டிவி. சென்னை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாநாட்டு நிகழ்வுகள் நோக்கம் எதிர்பார்க்கும் விளைவுகள் குறித்து உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம் மற்றும் 12ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் விளக்கிக் கூறினார்.

இந்தநிகழ்வில் தொழில் துறையினர், தொழில் கூட்டமைப்பினர்,பேராசிரியர்கள் தொழில் முனைவோர்கள் உள்ளிட்ட பலர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.